21.04.2026.

CC.30/2022

அ.சா.2 பொன்னுசாமி த/பெ.கண்ண கவுண்டர்
**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

புகாரர்தாரர் சக்திவேல் எனது மருமகன் என்றால் சரிதான். திருமணம் நடந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் 25 ஆண்டுகள் ஆகிறது. நான் கொடுங்காலூரில் வசித்து வருகிறேன். புகார்தாரர் சக்திவேல் புன்னை கிராமத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 4 ஆண்டுகளுக்கு முன்பு புகார்தாரர் வாங்கியதாக சொல்லப்படும் நிலத்திற்கான கிரைய பத்திரத்தில் நான் சாட்சியாக கையொபப்பம் இட்டுள்ளேன் என்றால் இல்லை, ஆனால் வாங்கிய விவரம் தெரியும். அந்த கிரைய பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது.

எதிரி ஏழுமலை புகார்தாரருக்கு எதிராக சிவில் வழக்கு போட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் சிவில் வழக்கு போடவில்லை அடிதடி வழக்குதான் போட்டுள்ளார். புகார்தாரர் தாக்கல் செய்துள்ள புகாரில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது பற்றி குறிப்பிட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது முதுல் விரரணையில் எதிரி புகார்தாரர் சக்திவேலை நிலத்தை எழுதிகொடுக்கவில்லை என்றால் கத்தியால் குத்துவேன் என்று கூறியதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி குற்றச்சாட்டிற்காகதான் ஏற்கனவே புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் கொடுத்தபோது நான் புகார்தாரர் சக்திவேலுவுடன் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான்.

அந்த புகாரை யார் எழுதியது என்று தெரியும் ஆனால் தற்போது எனக்கு நினைவு இல்லை. அந்த புகாரில் எதிரி சக்திவேலை கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டிய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாருக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால்தான் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். புகார்தாரர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு போலிசார் மனு ரசீது கொடுத்தனரா என்றால் ரசீது கொடுத்தனர் ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. அவ்வாறு போலிசார் புகார்மனு ரசீதிலும் எதிரி கத்தியால் குத்திவிடுவேன் என்று மிரட்டிய விவரம் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் நான்கு ஆண்டுகள் இருக்கும்.

நான் சொல்வதுபோல் எந்த ஒரு சம்பவமும்நடைபெறவில்லை என்றாலும் போலிசாரிடம் கொடுத்த புகாரிலும் அவ்வாறு எதையும் குறிப்பிடவில்லை என்றாலும் புகார்தாரர் எனது மருமகன் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

// **உண்மை நகல்** //

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.